# உலர் வலைய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இல 2477-எஸ்ஆர்ஐ)- 2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்பிற்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 880,427,452 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,400,461,970 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நடைபெறும் வேலை | 854,765,289 | 339,497,791 | 1,351,366,762 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 25,662,163 | 8,361,091 | 49,095,208 |
| | 880,427,452 | 347,858,882 | 1,400,461,970 |

### 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள், பதிவேடுகள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

**(i) கடன் இல- 2477 (ஏடிபி)**

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 76,563 | 8,720,628 |
| கூட்டு: மீளளிப்புகள் | 30,622 | 3,989,192 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 1,137,467 |
| | 107,185 | 13,847,287 |

| | | |
|---|---|---|
| கழி: பற்றுதல்கள் | 94,508 | 12,235,272 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 12,677 | 1,612,015 |

**(ii) மானிய இல- 129 (ஏடிபி)**

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 1,183,595 | 134,812,981 |
| கூட்டு : மீள் நிரப்பல்கள் | 1,085,955 | 139,998,758 |
| வெளிநாட்டு நாணய பரிமாற்று இலாபம் | - | 14,782,528 |
| | 2,269,550 | 289,594,267 |
| கழி: பற்றுதல்கள் | 1,081,793 | 138,558,218 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 1,187,757 | 151,036,049 |

**(iii) மானிய இல- 130 (என்ரீஎவ்)**

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 142,029 | 16,177,357 |
| கூட்டு : மீள் நிரப்பல்கள் | 573,345 | 73,071,782 |
| வெளிநாட்டு நாணய பரிமாற்று இலாபம் | - | 1,605,193 |
| | 715,374 | 90,854,332 |
| கழி: பற்றுதல்கள் | 574,120 | 72,892,248 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 141,254 | 17,962,084 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 7.8 மில்லியன் தொகையான இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்து உறப்பட்ட செலவினம் கொடுப்பனவு

உறுதிச்சீட்டுக்கள் மற்றும் ஆதார ஆவணங்கள் என்பன கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை. இந்த நிலைமை என்னுடைய முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த விடயத்தை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் சார்பில் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,073,550, பெறுமதியான சொத்துக்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதிக் கூற்றுக்களில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடமிருந்து பெறவேண்டியவையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) நிர்மாண உபகரணங்கள், பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன கொள்வனவு செய்வதற்கு கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் ஐ.அ.டொலர் 18 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட நோக்கங்களிற்காக 2009 முதல் 2012 வரையான காலத்தின் போது ரூபா 10,503,234 ஆன இலங்கை அரசாங்க நிதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நீர் வழங்கல் அமைச்சால் வழங்கப்பட்ட தகவலின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட அமுலாக்கலிற்காக உள்ளூர் நிதிகள் ஊடாக ரூபா 573,169,030 தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட கணக்கின் படி, நேரொத்த தொகைகள் ரூபா 557,259,844 ஆக இருந்தது. இந்த வேறுபாடு இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலாண்டு ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்குறிப்பிட்ட திட்டத்தின் அடிப்படையில் முன்னேற்ற அறிக்கைகள் இன்மை காரணமாக விலகல்களை இனங்காணல் மற்றும் தேவைப்பட்ட குறைபாடுகளற்ற அளவீடுகள் எடுத்தல் என்பவற்றிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பொறிமுறைகள் எதுவும் இல்லாதிருந்தன.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவலின் படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | ஏடிபி கடன் | ஏடிபி மானியம் | நெதர்லாந்து நம்பிக்கை நிதியம் | இலங்கை அரசாங்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| உடன்பட்ட பங்களிப்பு (ஐ.அ.டொலர் மில்லியனில்) | 59.78 | 23.22 | 2.00 | 28.33 | 113.33 |
| 2012 திசெம்பர் 31 வரையான செயற்திட்டச் செலவினம் (ஐ.அ.டொலர் மில்லியனில்) | 3.24 | 2.95 | 1.19 | 4.74 | 12.12 |
| நிதிகளின் பயன்பாடு சதவீதமாக | 5.42 | 12.70 | 59.50 | 16.73 | 10.69 |

2010 ஆம் ஆண்டின் போது இரண்டாவது முறை கட்டுநிதி நிதியக் கணக்குகள் மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்தக் கணக்கில் ரூபா 1,999,999 தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது 2012 ஆம் ஆண்டின் இறுதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கடன் உடன்படிக்கையில் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| ஏடிபீ | 85 | 9,767.35 | 600 | 501.8 | 924.8 |
| இலங்கை அரசாங்கம் | 28.33 | 3,255.40 | 300 | 298.2 | 557.2 |
| மொத்தம் | 113.33 | 13,022.75 | 900 | 800* | 1,482.0* |

* இத்தொகைகள் முற்பணங்கள் மற்றும் அட்டுறு செலவினம் என்பன தவிர்க்கப்பட்டதன் காரணமாக இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து வேறுபடுகிறது.

நிதி மற்றும் பௌதீக எய்தல்களின் வருடாந்த இலக்குகள் கிடைக்காமை காரணமாக, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்த வேண்டுமென தேவைப்பட்ட உள்ளபடியான தொகை மதிப்பிட முடியாதிருந்தது. நிதிகளின் பயன்பாடு தொடர்பான மேற்குறிப்பிட்ட தகவல்களின் படி, செயற்திட்டத்தின் முன்னேற்றம் இலக்கினை அடைவதிலிருந்து பெருமளவு பின்தங்கி இருந்ததென்பதைக் காட்டுகிறது.

## 3.3 பௌதீக செயலாற்றல்

(அ) செயற்திட்டமானது 2013 யூன் 30 அளவில் பூர்த்திசெய்ய வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் படி, மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றம் முறையே 31.25 சதவீமாகவும் மற்றும் 10.69 சதவீமாகவும் இருந்தது. எவ்வாறாயினும், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் காலத்தில் 86 சதவீம் கடந்திருந்ததுடன் ஒவ்வொரு செயற்திட்ட கூறுகளின் திரட்டிய செயலாற்றல் பின்வருமாறு உள்ளன.

| செயற்திட்ட நடவடிக்கை/ செயற்திட்டக் கூறு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | 2012 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான முன்னேற்றம் |
|---|---|---|
| ஆரம்ப படையணி | 5.61 | 5.49 |
| புலனாய்வு செய்தலும் அளவையிடலும் | 1.92 | 1.76 |
| மீள்குடியேற்றம் | 1.12 | 0.56 |
| சிலாபம் மற்றும் புத்தளத்தில் மேற்பரப்பு நீர் அபிவிருத்தி (SW/C&P/OI) | 1.00 | 0.92 |
| வவுனியாவில் மேற்பரப்பு நீர் அபிவிருத்தி (SW/V/02) | 1.40 | 1.36 |
| சிலாபம் புத்தளம், வவுனியா மற்றும் மன்னாரில் நிலத்தடி நீர் அபிவிருத்தி (GW/V&M/03A) | 0.19 | 0.16 |

| | | |
|---|---|---|
| சிலாபம் புத்தளம், வவுனியா மற்றும் மன்னாரில் நிலத்தடி நீர் அபிவிருத்தி (GW/V&M/03B) | 0.0 | 0.0 |
| சிலாபம் மற்றும் புத்தளத்தில் புதிய சுத்தகரிப்பு பொறிகளின் நிர்மாணம் மற்றும் குழாய்கள் பொருத்தல், தன்னியக்க முறைமை மற்றும் பொறிமுறை மற்றும் மின்னியல் (M and E) உபகரணங்கள் (WTP/C&P/04-A) | 1.85 | 1.53 |
| சிலாபம் மற்றும் புத்தளத்தில் புதிய சுத்திகரிப்பு பொறிகளின் நிர்மாணம் மற்றும் குழாய்கள் பொருத்தல், தான்னியக்க முறைமை மற்றும் பொறிமுறை மற்றும் மின்னியல் M & E உபகரணங்கள் (WTP/C&P/05) | 1.13 | 1.06 |
| சிலாபத்தில் DI HDPE & PVC குழாய்களின் வழங்கல் மற்றும் தாபித்தல், பிரதான பரிமாற்றங்களின் விசேட பொருத்துதல்கள் மற்றும் வால்வ்கள் மற்றும் விநியோக முறைமை (PIPES/C/08A) | 0.64 | 0.59 |
| சிலாபத்தில் DI HDPE & PVC குழாய்களின் வழங்கல் மற்றும் தாபித்தல், பிரதான பரிமாற்றங்களின் விசேட பொருத்துதல்கள் மற்றும் வால்வ்கள் மற்றும் விநியோக முறைமை (PIPES/C/08B) | 1.20 | 1.11 |
| புத்தளத்தில் DI HDPE & PVC குழாய்களின் வழங்கல் மற்றும் தாபித்தல், பிரதான பரிமாற்றங்களின் விசேட பொருத்துதல்கள் மற்றும் வால்வ்கள் மற்றும் விநியோக முறைமை (PIPES/P/09) | 1.40 | 1.32 |
| புத்தளத்தில் DI HDPE & PVC குழாய்களின் வழங்கல் மற்றும் தாபித்தல், பிரதான பரிமாற்றங்களின் விசேட பொருத்துதல்கள் மற்றும் வால்வ்கள் மற்றும் விநியோக முறைமை (PIPES/P/10) | 1.40 | 1.32 |

| | | |
|---|---|---|
| புத்தளத்தில் DI HDPE & PVC குழாய்களின் வழங்கல் மற்றும் தாபித்தல், பிரதான பரிமாற்றங்களின் விசேட பொருத்துதல்கள் மற்றும் வால்வ்கள் மற்றும் விநியோக முறைமை (PIPES/M/11) | 0.80 | 0.80 |
| மன்னாரில் தண்ணீர் களஞ்சியப்படுத்தல் கட்டமைப்பு நிர்மாணம் (STRUM/M12) | 0.67 | 0.60 |
| வங்காலை கிளைக்கு முருங்கன் முதல் மன்னார் வரை பிரதான நீர் பரிமாற்றத்திற்காக HDPE, DI குழாய்கள் வழங்கலும் பயன்படுத்தலும் (P&D/CN/ADB5/2012/01) | 3.52 | 3.36 |
| சிலாபம் மற்றும் புத்தளத்தில் தனிக்கட்ட சுத்திகரிப்பு வசதி மற்றும் இணைந்த நிர்மாணம் மற்றும் E&M உபகரணம் (SEP/C&p/06) | 0.75 | 0.68 |
| சிலாபம் மற்றும் புத்தளத்தில் தனிக்கட்ட சுத்திகரிப்பு வசதி மற்றும் இணைந்த நிர்மாணம் மற்றும் E&M உபகரணம் (SEP/C&p/07) | 0.75 | 0.74 |
| கிறைன் டிரக் 01 எண், வைக்கியும் ரங்கர் 03, தனிக் கப்ஸ் 08 எண், சிறிய டிரக் 04, மற்றும் மோட்டார சைக்கிள் 12 எண் என்பன வழங்கலும் விநியோகித்தலும் (Supply/ALL/13) | 0.49 | 0.45 |
| சிலாபத்தில் பொது மலசல கூடங்களின் நிர்மாணித்தல் (PT/C/14) | 0.19 | 0.19 |
| புத்தளத்தில் பொது மலசல கூடங்களின் நிர்மாணிப்பு (PT/C/15) | 0.19 | 0.19 |
| வவுனியாவில் பொது மலசல கூடங்களின் நிர்மாணிப்பு (PT/C/16) | 0.19 | 0.16 |

| | | |
|---|---|---|
| மன்னாரில் பொது மலசல கூடங்களின் நிர்மாணிப்பு (PT/C/17) | 0.19 | 0.16 |
| சிலாபம்/ புத்தளம்/ வவுனியா மற்றும் மன்னாரில் உள்ள பின்தங்கிய சமூகங்களிற்கான சுகாதரம் | 0.38 | 0.36 |
| பொதி சீ- நீர் வள முகாமைத்துவம் மீதான ஆலோசனை (P&D/C,N/ADB5?2009/01) | 4.00 | 4.00 |
| வவுனியாவில் பிரதேச ஆதரவளித்தல் நிலையத்திற்கான (வடக்கு) அலுவலக கட்டிட நிர்மாணம் | 2.50 | 2.40 |
| பொதி பீ- நிறுவனரீதியான அபிவிருத்தி மீதான ஆலோசனை | 0.00 | அமுலாக்கப் படவில்லை |
| ஒட்டுமொத்த முன்னேற்றம் | 33.47 | 31.25 |

## 3.4 சுகாதார நிகழ்ச்சித்திட்டம்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்ட செயலக பிரிவு | பூர்த்தியாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட அலகுகள் | 2012 திசெமபர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்ட அலகுகள் | செயற்திட்டத்தால் பணவளிப்பு | |
|---|---|---|---|---|
| | | | நிதிக் கூற்றுகளின் படி | முன்னேற்ற அறிக்கையின் படி |
| | | | ரூபா மில் | ரூபா. மில் |
| சிலாபம் | 500 | 176 | 4,526,745 | 4,518,740 |
| புத்தளம் | 500 | 285 | 6,719,575 | 6,719,575 |
| மன்னார் | 330 | 87 | 6,304,980 | 3,154,620 |
| வவுனியா | 500 | - | - | - |
| மொத்தம் | 1,830 | 548 | 17,551,300 | 14,392,935 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,126 மலசலகூடங்கள் பூர்த்தியாக்க வேண்டும். எவ்வாறாயினும், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலே குறிப்பிடப்பட்டவாறு வழமையான முன்னேறறம் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் எய்தப்பட முடியுமா என்பது ஐயத்திற்கிடமாகவுள்ளது.

(ii) பல மலசல கூடங்கள் அம் மலசல கூடங்கள் பயன்படுத்துவது பற்றிய அறிவின்மை காரணமாக குறித்த நோக்கங்களிற்காகவும் நலனாளிகள் அவர்களுடைய சுகாதாரத்தினை மேம்படுத்தவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது. மேற்குறிப்பிட்ட மலசல கூடங்களின் முறையான பயன்பாடு வரை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், போதிய நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.